முதன்மைச் செயலர்/ஆணையர் (வ.வ.)
1 மார் 2016
எழிலகம், சென்னை–600 005

2 மார் 2016

**சுருக்கம்**

தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 – திரைப்படங்கள் – **"நவரச திலகம்"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு கோரிக்கை நிராகரித்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**வணிகவரி மற்றும் பதிவு (சி1) த்துறை**

அரசாணை (டி) எண். 58

**நாள்: 26.02.2016**
**மன்மத, மாசி 14,**
**திருவள்ளுவர் ஆண்டு, 2047**

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (நிலை) எண்.89, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 21.7.2011.
2. அரசாணை (நிலை) எண்.2, வணிகவரி (ம) பதிவுத்துறை, நாள் 03.1.2012.
3. முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் கடித எண்.சட்டக்குழு–4/2275/2016, நாள் 02.02.2016 தேர்வுக்குழு எண். 98/2015–2016.
4. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண். நிதி–3/1441/2016, நாள் 19.02.2016.

-----

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் கீழ் கேளிக்கை வரிச்சலுகை பெற திரைப்படங்களுக்கு தமிழில் பெயர் சூட்டப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் சில கூடுதல் தகுதி வரையறைகளை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது. மேலும் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்கின்ற திரைப்படங்களை பார்வையிட்டு வரிவிலக்கிற்கு பரிந்துரை செய்ய மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு தேர்வுக்குழு அமைத்து ஆணை வெளியிடப்பட்டது.

2. முதன்மைச் செயலாளர்/வணிகவரி ஆணையர் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்கண்ட குழு **"நவரச திலகம்"** தமிழ் திரைப்படத்தை முழுமையாக பார்வையிட்டு, பார்வையிட்ட அனைத்து உறுப்பினர்களும் இத்திரைப்படத்திற்கு கேளிக்கை வரிவிலக்கு அளிக்கலாம் என பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

3. மேற்கண்ட சூழ்நிலையில், **"நவரச திலகம்"** என்ற திரைப்படத்தின் தலைப்பு சமசுகிருத மற்றும் வடசொற்கள் என்ற தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்தின் அடிப்படையில், தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939–ன் பிரிவு 8, உட்பிரிவு 2ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்தி, **"நவரச திலகம்"** தமிழ் திரைப்படத்திற்கு கேளிக்கை வரி விலக்கு கோரிக்கையை நிராக்கரிக்கலாம் என முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசீமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர் (முகூபொ).

**பெறுநர்**

முதன்மைச் செயலர்/வணிகவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
செயலாளர், தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை, சென்னை–9.
இயக்குநர், தமிழ்வளர்ச்சி துறை, சென்னை–8.
சம்பந்தப்பட்ட படத்தயாரிப்பாளர்.

நகல்:

சிறப்பு நேர்முக உதவியாளர், அமைச்சர் (வணிகவரி மற்றும் பதிவு) அலுவலகம், சென்னை–9.
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத்துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

26/2/2016
பிரிவு அலுவலர்.